வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர்-சரவண குமார்

தேதி 21.8.2024 நேரம் மாலை 6.10 மணி

---------------------------------------------------------------

தலைப்புச் செய்திகள்

பிரதமர் திரு நரேந்திர மோடி, **போலந்து-உக்ரைன் பயணத்தின்** முதல் கட்டமாக, இன்று போலந்து சென்றுள்ளார்.

**குலோபல் பைனான்ஸ்** மதிப்பீட்டு அறிக்கையில் **A-plus அந்தஸ்து** பெற்றுள்ள, ரிசர்வ் வங்கி ஆளுநர் திரு சக்திகாந்த தாசுக்கு, பிரதமர் வாழ்த்து தெரிவித்துள்ளார்.

சில்லரை வியாபாரிகளின் நலனை மேம்படுத்த, அனைத்து தரப்பினரின் ஒருங்கிணைந்த முயற்சிகள் அவசியம் என்று, மத்திய தொழில்-வர்த்தக அமைச்சர் திரு **பியூஷ் கோயல்** கூறி உள்ளார்.

முதலாவது **தேசிய விண்வெளி தினம்**, நாடு முழுவதும், வரும் 23-ஆம் தேதி கொண்டாடப்பட உள்ளது.

மோடி

பிரதமர் திரு நரேந்திர மோடி, போலந்து-உக்ரைன் ஆகிய 2 நாடுகளுக்கான பயணமாக இன்று போலந்து சென்றுள்ளார். போலந்து

தலைநகர் வார்சா-வில் அவர் இன்று மாலை ஜாம்சாகிப் நவாநகர் நினைவிடத்திலும், மாண்டி காசினோ போர் நினைவுச் சின்னத்திலும் மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்துகிறார். தொடர்ந்து வார்சா-வில் உள்ள இந்திய சமூகத்தினர் ஏற்பாடு செய்துள்ள விழாவில், அவர் கலந்து கொள்கிறார்.

மத்திய ஐரோப்பாவில் இந்தியாவின் முக்கிய பொருளாதாரக் கூட்டணி நாடாக, போலந்து திகழ்வதாக, புறப்பாட்டுச் செய்தியில் பிரதமர் கூறி உள்ளார். பன்மைத் துவம் மற்றும் ஜனநாயகத்தில் இருநாடுகளுக்கும் உள்ள நம்பிக்கை, இருதரப்பு உறவுகளை மேலும் வலுப்படுத்தும் என்று அவர் தெரிவித்துள்ளார். இந்தியாவிற்கும் போலந்து நாட்டிற்கும் இடையிலான தூதரக உறவுகள், 70 ஆண்டுகளை எட்டி இருப்பதையும் பிரதமர் சுட்டிக் காட்டி உள்ளார்.

போலந்தில், அந்நாட்டு பிரதமர் திரு டொனால்டு டஸ்க், அதிபர் திரு ஆந்த்ரேஸ் டூடா ஆகியோரை அவர் சந்திக்கிறார். இந்திய பிரதமர் ஒருவர் போலந்து செல்வது, கடந்த 45 ஆண்டுகளில் இதுவே முதல் முறையாகும்.

போலந்தில் இருந்து உக்ரைன் செல்லும் பிரதமர் திரு நரேந்திர மோடி, அங்கு அந்நாட்டு அதிபர் திரு விளாடிமீர் ஜெலன்ஸ்கி-யை சந்திக்கிறார். இந்த சந்திப்பின் மூலம் இருதரப்பு ஒத்துழைப்பை

வலுப்படுத்திக் கொள்ளவும், உக்ரைன் பிரச்சனைக்கு அமைதி முறையில் தீர்வு காண்பதற்கான இந்தியாவின் கருத்துக்களை பகிர்ந்து கொள்ளவும் தாம் ஆர்வம் கொண்டுள்ளதாக பிரதமர் தெரிவித்துள்ளார். 1992-ஆம் ஆண்டு இந்தியா-உக்ரைன் உறவுகள் தொடங்கியது முதல், இந்திய பிரதமர் ஒருவர் உக்ரைன் செல்வது இதுவே முதல் முறையாகும்.

*ரிசர்வ் வங்கி*

உலக நாடுகளின் மத்திய வங்கியாளர்கள் பற்றிய **குலோபல் பைனான்ஸ்** மதிப்பீட்டு அறிக்கையில், ரிசர்வ் வங்கி ஆளுநர் திரு சக்திகாந்த தாஸ், தொடர்ந்து 2-ஆவது முறையாக, **A-plus அந்தஸ்து** பெற்றுள்ளது குறித்து, பிரதமர் திரு நரேந்திர மோடி வாழ்த்து தெரிவித்துள்ளார். இது, ரிசர்வ் வங்கியில் திரு சக்திகாந்த தாசின் தலைமைத் துவத்திற்கும், நாட்டின் பொருளாதார வளர்ச்சி மற்றும் ஸ்திரத் தன்மையை உறுதிப்படுத்துவதில் அவரது பங்கு பணிகளுக்கும் கிடைத்துள்ள அங்கீகாரம் என்று, சமூக ஊடகப் பதிவு ஒன்றில் பிரதமர் கூறி உள்ளார்.

*தன்கர்*

எழுச்சிமிகு இந்தியாவும்-மறுமலர்ச்சி ஆப்பிரிக்காவும் இணைந்து, தெற்குலக நாடுகளுக்கு இடையிலான ஒத்துழைப்பிற்கு ஊக்கமளிக்க இயலும் என்று. குடியரசு துணைத் தலைவர் திரு ஜெகதீப் தன்கர் கூறி

உள்ளார். இன்று புதுடெல்லியில், இந்திய தொழில்கள் கூட்டமைப்பின் 19-ஆவது இந்தியா-ஆப்பிரிக்கா வர்த்தக மாநாட்டின் தொடக்க விழா அமர்வில் அவர் உரையாற்றினார். தூய தொழில் நுட்பம், பருவநிலை மாற்றத்திற்கு ஏற்ற வேளாண்மை, கடல் சார் பாதுகாப்பு, போக்குவரத்து தொடர்புகள் உட்பட பல்வேறு துறைகளில் இந்தியாவிற்கும் ஆப்பிரிக்க நாடுகளுக்கும் இடையே ஒத்துழைப்பை அதிகரிக்க, ஏராளமான வாய்ப்புகள் இருப்பதாக அவர் கூறினார். இதற்கு தேவையான கல்வி, பயிற்சி, மற்றும் திறன் மேம்பாட்டு வாய்ப்புகளை ஆப்பிரிக்க நாடுகளுக்கு இந்தியா வழங்கி வருவதாகவும், ஆப்பிரிக்க ஒன்றியத்தின் முன்னுரிமைத் தேவைகளுக்கு உதவுவதில் இந்தியாவிற்குள்ள உறுதிப்பாட்டிற்கு இதுவே சான்றாகும் என்றும் அவர் தெரிவித்தார். இந்தியாவின் 4-ஆவது மிகப் பெரிய வர்த்தக கூட்டாளியாக ஆப்பிரிக்கா திகழ்வதையும் அவர் சுட்டிக் காட்டினார்.

ஜி-20 கூட்டமைப்பின் இந்திய தலைமையின் போது ஆப்பிரிக்க நாடுகளுக்கு உறுப்பினர் அந்தஸ்து வழங்கப்பட்டது குறித்து இந்தியா பெருமிதம் அடைவதாகவும், இது, மிக முக்கியப் புவி-அரசியல் மாற்றம் என்றும் குடியரசு துணைத் தலைவர் தெரிவித்தார். ஜிம்பாப்வே துணை அதிபர் டாக்டர் சிவேங்கா இந்நிகழ்ச்சியில் பேசுகையில், ஆப்பிரிக்கா ஏராளமான முதலீட்டு வாய்ப்புக்களை இந்தியாவிற்கு வழங்குவதாகவும்,

இந்திய நிறுவனங்கள், ஆப்பிரிக்க நிறுவனங்களுடன் இணைந்து செயல்படுவதன் மூலம், உலக அளவில் கால் பதிக்க முடியும் என்றும் கூறினார். ஆப்பிரிக்காவின் அபாரமான கனிம வளமும், இந்தியாவின் தொழில் நுட்பத் திறன்களும் இணைந்தால், பரஸ்பர நன்மை பெருமளவில் விளையும் என்று அவர் குறிப்பிட்டார். மொரீசியஸ் துணை அதிபர் திரு **எட்டி போய்சிஸான்**, லைபீரியா துணை அதிபர் திரு **ஜெரமியா கூங்**, காம்பியா துணை அதிபர் திரு **முகமது ஜாலோ** ஆகியோரும் இம்மாநாட்டில் கலந்து கொண்டனர்.

*தன்கர்-குஜராத்*

குடியரசு துணைத் தலைவர் திரு ஜெகதீப் தன்கர் நாளை குஜராத் செல்கிறார். காந்தி நகரில் உள்ள **தேசிய தடய அறிவியல் பல்கலைக் கழகத்தில்**, மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களிடையே உரையாற்றும் அவர், தொடர்ந்து, அகமதாபாத்தில் உள்ள **குஜராத் பல்கலைக் கழகத்தில்**, **தர்ம தம்மா** சர்வதேச மாநாட்டிலும், தலைமை விருந்தினராகக் கலந்து கொள்கிறார்.

*தீவிரவாதம்*

ஆன்-லைன் முறையில் தீவிரவாதம் பரப்பப்படுவதை தடுப்பது குறித்து, ஐரோப்பிய யூனியன், மற்றும், உலக தீவிரவாத எதிர்ப்புக் கவுன்சிலுடன் இணைந்து வெளியுறவு அமைச்சகம் ஏற்பாடு செய்துள்ள 2

நாள் மாநாடு புதுடெல்லியில் இன்று தொடங்கி உள்ளது. தீவிரவாதிகளின் டிஜிட்டல் பிரச்சாரத்தால் ஏற்படும் சவால்களை சமாளிக்க பிராந்திய அளவில் கூட்டு முயற்சிகள் அவசியம் என்று, இந்தியாவிற்கான ஐரோப்பிய யூனியன் தூதர் திரு ஹெர்வி டெல்ஃபின் இம்மாநாட்டில் பேசுகையில் கூறினார். ஐரோப்பா மற்றும் தெற்காசிய நாடுகளில் இருந்து, நிபுணர்கள், கல்வியாளர்கள், கொள்கை வகுப்பாளர்கள், மற்றும், சட்ட அமலாக்க அதிகாரிகள் இதில் பங்கேற்றுள்ளனர்.

கோயல்

நாட்டில் மொத்தம் உள்ள 100 மில்லியன் சில்லரை வியாபாரிகளின் நலனை மேம்படுத்த, அனைத்து தரப்பினரின் ஒருங்கிணைந்த முயற்சிகள் அவசியம் என்று, மத்திய தொழில்-வர்த்தக அமைச்சர் திரு பியூஷ் கோயல் கூறி உள்ளார். ஆன்-லைன் வியாபாரத்தால், மக்களுக்கான வேலை வாய்ப்புகள் மற்றும் நுகர்வோர் நலனில் ஏற்படும் தாக்கங்கள் குறித்து புதுடெல்லியில் இன்று நடைபெற்ற கருத்தரங்கின் தொடக்க அமர்வில் அவர் பேசுகையில், சிறு வியாபாரிகளையும், பாரம்பரிய வர்த்தக முறைகளையும் மக்கள் ஆதரிக்க தேவை இருப்பதால், எவரும் முற்றிலுமாக மின்னணு வர்த்தகத்திற்கு மாறி விட முடியாது என்றார். தொழில் நுட்பத்தினால் சாதாரண மக்களின் அதிகாரம் மேம்படுவதும்,

நுகர்வோர் தேவைகளை திறம்பட்ட முறையில் பூர்த்தி செய்ய இயல்வதும் உண்மை தான் என்றாலும், புதுமையான எந்த ஒரு தொழில் நுட்பமும் மக்களை மையமாகக் கொண்டதாகவும் சமுதாயத்தின் பெரும் பங்கு மக்களுக்கு பயன் உள்ளதாகவும் அமைதல் அவசியம் என்று அமைச்சர் மேலும் குறிப்பிட்டார்.

*விண்வெளி தினம்*

முதலாவது தேசிய விண்வெளி தினம், நாடு முழுவதும் வரும் 23-ஆம் தேதி கொண்டாடப்பட உள்ளது. **நிலவைத் தொடுகையில் மக்களின் வாழ்க்கையை தொடுதல்-இந்தியாவின் விண்வெளி சகாப்தம்** என்ற கருப்பொருள் அடிப்படையில் இவ்வாண்டு விண்வெளி தினம் கொண்டாடப்படுகிறது. விண்வெளி ஆராய்ச்சிகளால் சமூகத்திலும், தொழில் நுட்பத்திலும் ஏற்படும் ஆழமான தாக்கங்களை வலியுறுத்தும் வகையில் இக்கருப்பொருள் அமைந்துள்ளது. தேசிய விண்வெளி தினத்தை ஒட்டி, புதுடெல்லி பாரத் மண்டபத்தில் நடைபெற உள்ள பிரதான நிகழ்ச்சியை. குடியரசு தலைவர் திருமதி திரவுபதி முர்மு தொடக்கி வைக்கிறார். இதுகுறித்து மத்திய விண்வெளித் துறை இணை அமைச்சர் டாக்டர் ஜிதேந்திர சிங் புதுடெல்லியில் செய்தியாளர்களிடம் பேசுகையில், கடந்த ஆண்டு ஆகஸ்டு 23-ஆம் தேதி அன்று தான், சந்திரயான்-3 விண்கலத்தின் விக்ரம் லேண்டர் கருவி நிலவின்

மேற்பரப்பில் மென்மையாக தரை இறங்கி சந்திரயான் திட்டத்தின் வெற்றி, சாதிக்கப்பட்டதாக கூறினார். இதன் மூலம் இந்தியா, நிலவில் தரையிறங்கிய 4-ஆவது நாடாகவும் நிலவின் தென்துருவப் பகுதியில் தரையிறங்கிய முதல் நாடாகவும் மேம்பட்டதை அவர் சுட்டிக் காட்டினார். அடுத்த 10 ஆண்டுகளில் இந்தியாவின் விண்வெளிப் பொருளாதாரம், 44 பில்லியன் டாலர் மதிப்புள்ளதாக, 5 மடங்கு வளர்ச்சி அடையும் என்றும் அமைச்சர் கூறினார்.

நிலவின் தென் துருவத்தில் சந்திரயான்-3 திட்டம் வெற்றி பெற்ற நாளான ஆகஸ்டு 23-ஆம் தேதியை, பிரதமர் திரு நரேந்திர மோடி தேசிய விண்வெளி தினமாக அறிவித்ததும், விண்கலத்தின் **லேண்டர்** கருவி நிலவில் தரையிறங்கிய இடம் **சிவசக்தி முனை** என பெயரிடப்பட்டதும், குறிப்பிடத் தக்கது. விண்வெளி ஆராய்ச்சியில் இந்தியாவின் சாதனைகளையும், விண்வெளித் தொழில் நுட்பத்தில் இந்தியா எட்டியுள்ள முன்னேற்றங்களையும் அங்கீகரிக்கும் வகையில் **தேசிய விண்வெளி தினம்** அமைந்துள்ளது. விண்வெளி அறிவியல் மற்றும் தொழில் நுட்பம் பற்றிய ஆர்வத்தை மாணவர்களிடையே தூண்டுவதன் மூலம், எதிர்கால சந்ததிக்கு உணர்வூக்கம் அளிக்கவும், சரியான முன் உதாரணங்களை வழங்கவும், இந்நாள் அர்ப்பணிக்கப் படுகிறது.

*புதுச்சேரி-ஜீவா*

புதுச்சேரியில், தோழர் ப. ஜீவானந்தம் பிறந்த நாள் அரசு சார்பில் இன்று கொண்டாடப்பட்டது. சாரம் அவ்வை திடலில் உள்ள அன்னாரின் திருவுருவச் சிலைக்கு பொதுப் பணித்துறை அமைச்சர் திரு லட்சுமி நாராயணன், ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் திரு சாய் சரவணன் குமார், அரசுக் கொறடா திரு ஏ கே டி ஆறுமுகம், மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.

*பல் மருத்துவம்*

அகில இந்திய அளவில் சிறந்த பல் மருத்துவக் கல்லூரிகளுக்கான, பியர் ஃபவுச்சர் விருது, மற்றும், NIRF தரவரிசைப் பட்டியலில் முதல் முறையாக இடம் பெற விண்ணப்பித்து மொத்தம் 184 கல்லூரிகளுக்கான தரவரிசைப் பட்டியலில் 35-ஆம் இடம் பெற்று சாதனை படைத்துள்ள, புதுச்சேரி மகாத்மா காந்தி முதுகலை பல் மருத்துவ நிறுவனத்தின் முதல்வர் திரு கென்னடி பாபு இன்று, முதலமைச்சரும், பல்மருத்துக் கல்லூரியின் தலைவருமான திரு ரங்கசாமியை சந்தித்து வாழ்த்து பெற்றார். வரவிருக்கும் காலங்களில் இக்கல்லூரி, தரவரிசைப் பட்டியலில் மேலும் முன்னேற வேண்டும் என முதலமைச்சர் கேட்டுக் கொண்டார்.

*கிரிக்கெட்*

உலக கோப்பைக்கான 9-ஆவது மகளிர் 20 ஓவர் கிரிக்கெட் போட்டித் தொடரை, பங்களாதேஷில் இருந்து, ஐக்கிய அரபு

எமிரேட்டுகளுக்கு மாற்ற, சர்வதேச கிரிக்கெட் கவுன்சில் முடிவு செய்துள்ளது. ஐக்கிய அரபு எமிரேட்டுகளில், துபாய்-ஷார்ஜா ஆகிய 2 இடங்களில், அக்டோபர் 3 முதல், 20-ஆம் தேதி வரை போட்டிகள் நடைபெறும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. ஆயினும் இப்போட்டிகளுக்கான அதிகாரப் பூர்வப் புரவலர் நாடாக, பங்களாதேஷ் தொடர்ந்து நீடிக்கும் என்றும் ஐசிசி தெரிவித்துள்ளது.

மேக்வால்

மக்கள், தாங்கள் பணிபுரியும் இடங்களில், சக ஊழியர்கள் மீதான அக்கறையுடன், மகிழ்ச்சியான சூழல் ஒன்றை பராமரிக்க வேண்டும் என, சட்டம் மற்றும் நீதித் துறை அமைச்சர் திரு அர்ஜுன்ராம் மேக்வால் கூறி உள்ளார். மகிழ்ச்சியான சூழலை கட்டமைக்கும் திறனை மானுட மாண்புகள் மூலம் மேம்படுத்துதல் என்பது குறித்து புதுடெல்லியில் இன்று நடைபெற்ற ஊக்க உரை மற்றும் பயிலரங்கை தொடக்கி வைத்துப் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார். ஒருவர் மீது ஒருவர் அக்கறையை பகிர்ந்து கொள்ளும் பழக்கத்தை வளர்த்துக் கொண்டால், வேதனையான உணர்வுகளை குணப்படுத்த உதவிகரமாக இருக்கும் என்று அவர் தெரிவித்தார். மன அழுத்தத்தை சரியாக நிர்வகித்து அழுத்தமின்றி வாழ தெரிந்து கொண்டால் ஊழியர்களின் செயல் திறன் அதிகரிக்கும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

மீண்டும் தலைப்புச் செய்திகள்

பிரதமர் திரு நரேந்திர மோடி, **போலந்து-உக்ரைன் பயணத்தின்** முதல் கட்டமாக, இன்று போலந்து சென்றுள்ளார்.

**குலோபல் பைனான்ஸ்** மதிப்பீட்டு அறிக்கையில் **A-plus அந்தஸ்து** பெற்றுள்ள, ரிசர்வ் வங்கி ஆளுநர் திரு சக்திகாந்த தாசுக்கு, பிரதமர் வாழ்த்து தெரிவித்துள்ளார்.

சில்லரை வியாபாரிகளின் நலனை மேம்படுத்த, அனைத்து தரப்பினரின் ஒருங்கிணைந்த முயற்சிகள் அவசியம் என்று, மத்திய தொழில்-வர்த்தக அமைச்சர் திரு **பியூஷ் கோயல்** கூறி உள்ளார்.

முதலாவது **தேசிய விண்வெளி தினம்**, நாடு முழுவதும், வரும் 23-ஆம் தேதி கொண்டாடப்பட உள்ளது.

இத்துடன் இந்த செய்தி அறிக்கை நிறைவு பெறுகிறது.

------------------------